செ. கு. எண்: 285 நாள்: 15.12.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 15.12.2020**

---

கும்பகோணம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராம. ராமநாதன் அவர்களின் அன்பு தந்தை திரு. இராமச்சந்திர சாஸ்திரிகள் (வயது 107) அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தி அறிந்து வருத்தமடைந்தேன்.

திரு. இராமச்சந்திர சாஸ்திரிகள் துறவரம் பூண்ட பின்னர் ஸ்ரீராம பிரமேந்திர சரஸ்வதி சுவாமிகள் என அழைக்கப்பட்டார். இவர் கும்பகோணத்தில் உள்ள ராஜவேத பாடசாலையின் முதல்வராகவும், இராமேஸ்வரத்தில் உள்ள சங்கர மடத்தின் மேலாளராகவும் பணியாற்றிய சிறப்புக்குரியவர்.

திரு. இராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களை இழந்து வாடும் அவரது சிஷ்ய கோடிகளுக்கும், ஆன்மிக அன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**